# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதளமுகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு.மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

முறையீட்டு மனு எண்.158/மா/2024
நாள் 18.12.2024

எம். இராதாகிருஷ்ணன், .......... முறையீட்டு மனுதாரர்
சென்னை 34.

மண்டல அலுவலர், .......... எதிர் மனுதாரர்
மண்டலம் 2,
பெரு நகர சென்னை மாநகராட்சி.

சென்னை, நுங்கம்பாக்கம், டாக்டர் திருமூர்த்தி நகர் பிரதான சாலை, சத்யா பிளாசா எண்.7, 2வது தெரு என்கிற முகவரியில் வசிக்கும் திரு எம். இராதாகிருஷ்ணன் என்பவரின் 24.11.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.11.2023 அன்று பெறப்பட்டு, 158/மா/2024, என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, நுங்கம்பாக்கம், டாக்டர் திரு மூர்த்தி நகர் பிரதான சாலை, சத்யா பிளாசா, 2வது தெரு எண்.7, என்கிற முகவரியில் வசிக்கும் திரு எம். இராதாகிருஷ்ணன் என்பவர் தனது 24.11.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"சென்னை மாநகராட்சி சார்பில் மண்டலம் 2, வார்டு 16, பர்மா நகர், TPP சாலையில் தெருவிளக்குகள் மற்றும் கம்பங்கள் பொருத்தும் ஒப்பந்தம் கடந்த ஜூன் 2022இல் அறிவிக்கப்பட்டது. அதன்படி M/s.Narayan & Co., நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. ஒப்பந்த பணியை மேற்கொள்ள பணி ஆணை 16.08.2022–ல் வழங்கப்பட்டு M/s.Narayan & Co., நிறுவனத்தின் சார்பில் பணி 16.08.2022–ல் துவங்கி 11.10.2022ல் முடியுற்றது. ஆனால் ஒப்பந்தம் அறிவிக்கப்படுவதற்கு முன்னதாகவே TPP சாலையில் தெருவிளக்குகள் மற்றும் கம்பங்கள் பொருத்தப்பட்டுள்ளது, அதாவது தெரு விளக்குகள் பொருத்தப்பட்ட நேரத்தில் எடுக்கப்பட்ட புகைப்பட ஆவணத்தை கவனித்தால் அந்த சாலை பழுதுடைந்து இருப்பது தெளிவாக தெரியும். அதே TPP சாலையை கவனித்தால் அந்த சாலை பழுதடைந்ததின் காரணமாக சென்னை மாநகராட்சி சார்பில் கடந்த 21.05.2022 அன்று பணி மேற்கொள்ளப்பட்டு புதிதாக போடப்பட்டுள்ளது அதன்படி பார்த்தால், சாலை போடுவதற்கு முன்பு அந்த தெருவிளக்குகள் மற்றும் கம்பங்கள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும். அப்படியானால் மே 2022–க்கு முன்பு பொருத்தப்பட்ட தெருவிளக்கு மற்றும் கம்பங்களுக்கான ஒப்பந்தம் எப்படி ஜூன் 2022–இல்

அறிவிக்கப்பட்டு 16 ஆகஸ்ட் 2022–இல் பணி ஆணை வழங்கமுடியும். RTI-யில் பெறப்பட்ட ஆவணங்கள் மூலம் தெருவிளக்கு மற்றும் கம்பங்கள் பொருத்தும் பணி மே 2022 காலகட்டத்தில் அல்லது அதற்கு முன்போ செய்யப்பட்டுள்ளது என தெளிவாக தெரிகிறது. அதன்படி பார்த்தால், ஒப்பந்த பணி M/s.Narayan & Co., கொடுக்க வேண்டும் என முன்பே முடிவு செய்து தெருவிளக்கு மற்றும் கம்பங்கள் பொருத்தும் பணி முடிந்த பிறகு ஒப்பந்தம் அறிவித்து M/s.Narayan & Co., நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கியுள்ளனர். எனவே இது pre-fixed tender, இதன் மூலம் அரசும், பொதுமக்களும் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

இது ஒப்பந்த சட்டம் 1998 மற்றும் விதி 2000–க்கு முற்றிலும் புறம்பானது. ஆகையால் ஒப்பந்த முறைகேட்டில் ஈடுபட்ட M/s.Narayan & Co., ஒப்பந்ததாரர் கருப்பு பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும். இந்த கூட்டுச்சதியில் ஈடுபட்ட சென்னை மாநகராட்சியின் ஒப்பந்த குழு மற்றும் நிறைவு சான்று அளித்த மண்டலம் 2–ன் AE, வார்டு 16–ன் AEE ஆகியோர் விசாரிக்கப்பட்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும் இந்த ஒப்பந்தத்தில் மக்கள் வரிப்பணம் இழப்பு குறித்து ஆய்வு செய்து அந்த தொகை மீட்கப்படவேண்டும் என அறப்போர் இயக்கம் கோருகிறது என்றும்,

(i) ஒப்பந்த முறைகேட்டில் ஈடுபட்ட M/s.Narayan & Co., நிறுவனம் கருப்பு பட்டியலில் சேர்க்கப்படவேண்டும்

(ii) ஒப்பந்த முறைகேட்டில் கூட்டுச்சதியில் ஈடுபட்ட ஒப்பந்த குழு மண்டலம் 2–ன் AE மற்றும் 16–ன் AEE ஆகியோர் மீது குற்றவியல் நடவடிக்கை மற்றும் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 02.01.2024 நாளிட்ட கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2–ன் மண்டல அலுவலர் தன்னுடைய 22.01.2024 மற்றும் 27.10.2024 நாளிட்ட கடிதங்களில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"2013 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த பணிகள் கீழ் பர்மா நகர், TPP சாலையில் தெருவிளக்கு மின்கம்பங்கள் பொருத்தப்பட்டது. முதலில் புகார் மனுவில் தெரிவித்தவாறு புதியதாக அமைக்கப்படவில்லை என்றும், அந்த சாலை 2013 முதல் தெருவிளக்குகள் பயன்பாட்டில் உள்ளது என்றும், மேலும் பர்மா நகர் TPP சாலையில், புதியதாக பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பாலம் கட்டும் பணி நடைபெற்று வந்தது என்றும் தெரிவித்துள்ளார். பாலம் அமைக்கப்பட்டதன் விளைவாக, சாலை விரிவாக்கம் அடைந்தது. அதற்கு 3 மீட்டர் சாலை விரிவாக்கம் செய்வதற்கு 2013–ல் அமைக்கப்பட்ட தெருவிளக்குகள் இடையூறாக இருந்தது. எனவே பாலங்கள் துறை மூலம் வைப்புப்பணியாக தெரு விளக்குகளை அகற்றி மாற்று இடத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டது. மேலும் புதியதாக கட்டப்பட்டுள்ள பாலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொளி மூலம் திறந்து மக்கள் பயன்பாட்டிற்கு வைக்க தேதி 12.05.2022 ஒதுக்கப்பட்டது. புதிதாக கட்டப்பட்டு வரும் பாலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்க முடிவு செய்யப்பட்ட நிலையில் தற்பொழுதுள்ள தெருவிளக்கு மின்கம்பங்களை அவசரகால நிபந்தனைகளின் அடிப்படையில் மாற்ற வேண்டி 05.04.2022 அன்று உரிய நிர்வாக அனுமதி CE-மின்துறை, SE-மின்துறை மற்றும் DEE-வடக்கு அவர்களிடமிருந்து மின்விளக்கு கம்பங்களை மாற்றி அமைக்கும் பணி மேற்கொள்ள உரிய ஒப்புதல் பெறப்பட்டது. மேலும் மின்விளக்கு கம்பங்களை மாற்றுவதற்காக SE-பாலங்கள் துறைக்கு கடிதம் மற்றும்

மதிப்பீடு முன்மொழியப்பட்டு மின்சார துறை மூலம் மாற்றி அமைக்கும் பணிகளை மேற்கொள்ள வைப்புத் தொகை ரூ.9,25,000/- கோரப்பட்டு அதன்படி பாலங்கள் துறையிலிருந்து நிதி வைப்புத்தொகையை செலுத்த FA/GCC-யிடம் கோரப்பட்டு அவர்களிடமிருந்து 20.04.2022–ல் ஒப்புதல் பெறப்பட்டது. இந்த நிர்வாக நிதி ஒதுக்கீடு நடைபெற்று வரும் சூழலில், பாலம் கட்டும் பணி விரைந்து முடிக்கப்படவேண்டும் என இருந்த நிலையில், வரையறுக்கப்பட்ட (limited) டெண்டரை அழைக்க SE-மின்சாரத்துறை மூலம் உத்தேசிக்கப்பட்டு பாலங்கள் வேலை, நடைபாதை வேலை மற்றும் சாலை விரிவாக்கப் பணிகளை செய்வதற்கான அவசரத்தின் தன்மையை கருத்தில் கொண்டு தெரு விளக்கு மின்கம்பங்களை மாற்றி அமைக்க அச்சமயத்தில் மண்டலம் 2 மணலியில் தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொண்டு வந்த ஒப்பந்ததாரர் நிறுவனத்திடம் கோரிக்கை வைக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் சாலை விரிவாக்கப்பணி, மேம்பாலம் கட்டும் பணி அனைத்தும் சீரிய முறையில் முடிவுற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முடிவு செய்த 12.05.2022 அன்று மேம்பாலம் காணொளி மூலம் திறக்கப்பட்டது. FA/GCC அவர்களிடமிருந்து நிதி வைப்புத்தொகை 20.5.2022 அன்று பெறப்பட்ட நிலையில் 20.05.2022 அன்றைய தினமே SE மின்துறை அவர்களிடம் வரையறுக்கப்பட்ட (limited) டெண்டர் கோர அனுமதி பெறப்பட்டது. நிதி வைப்புத்தொகை உரிய செலவின கணக்கில் பற்று வைக்கப்பட்ட பின்னரே தயாரிக்கப்பட்ட மதிப்பீடு இணையத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு திட்டக்குறியீடு பெறப்பட இயலும். அதன் பின்னரே வரையறுக்கப்பட்ட டெண்டர் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படும். 01.06.2022 அன்று இணையத்தில் டெண்டர் பதிவேற்றப்பட்டு டெண்டரில் பங்கு பெற்று (-1%) அளவில் அப்பணியை மேற்கண்ட ஒப்பந்ததாரர் M/s.Narayan &Co., L1 ஆக தேர்வு பெற்று LOA 28.06.2022 அன்று வழங்கப்பட்டது. ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று பணி ஆணை 16.08.2022 அன்று ஒப்பந்ததாருக்கு வழங்கப்பட்டது.

எனவே பாலம் திறப்பு விழா மாண்புமிகு முதல்வர் அவர்களால் மேற்கொள்ள தயாராக இருந்த நிலையில், பணிகளை செய்வதற்கான அவசர தன்மையை கருத்தில் கொண்டு மின்விளக்கு கம்பங்களை மாற்றும் பணி வைப்பு நிதியின் கீழ் உரிய நிர்வாக அனுமதி, தொழில்நுட்ப அனுமதி, வரையறுக்கப்பட்ட டெண்டர் மற்றும் உரிய தகுதியான உயர் அதிகாரிகளால் ஒப்புதல் அளிக்கப்பட்டு நெறிமுறைகள் பின்பற்றப்பட்டு அனைத்தும் உரிய முறையிலேயே நடைபெற்றுள்ளது என்று தெரிவித்துள்ளார்."

4. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் 29.10.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.09.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 29.10.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மண்டலம் 2, வார்டு 16, பர்மா நகர், TPP சாலையில் 17 தெருவிளக்குகள் மற்றும் கம்பங்கள் பொருத்துவதற்கான ஒப்பந்தம் ஜூன் 2022–இல் அறிவிக்கப்பட்டு அப்பணியை M/s.Narayan & Co., நிறுவனத்திற்கு 16.08.2022 அன்று வழங்கப்பட்டு, தெருவிளக்குகள் மற்றும் கம்பங்கள் பொருத்தும் பணி 16.08.2022–இல் துவங்கி 11.10.2022–இல் முடிவுற்றது. ஆனால் TPP சாலை பழுதுடைந்து இருந்ததால் 21.05.2022அன்று பழுதுபார்க்கப்பட்டு புதிதாக சாலை போடப்பட்டது.

நான் இம்முறைமன்றத்திற்கு சமர்ப்பித்த புகைப்பட ஆவணத்தில் (RTI ஆவணங்கள்) தெரு விளக்குகள் பொருத்தும்போது TPP சாலை பழுதுடைந்துள்ளது தெரிகிறது. இதன்படி

பார்த்தால் மே 2022–க்கு முன்பே அதாவது புதிய சாலை அமைக்கும் முன்பே அச்சாலையில் தெருவிளக்குகள் மற்றும் கம்பங்கள் பொருத்தப்பட்டது புலனாகிறது. பழுது அடைந்த சாலையில் தெருவிளக்குகள் மற்றும் கம்பங்கள் பொருத்தப்பட்ட நிலையில் ஆகஸ்ட் 2022–இல் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு M/s Narayan & Co., நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. இது அரசையும், பொதுமக்களையும் ஏமாற்றும் செயலாகும். இதிலிருந்து TPP சாலைக்கு தெருவிளக்குகள் மற்றும் கம்பங்கள் பொருத்தும் பணி M/s Narayan & Co நிறுவனத்திற்கு அளிக்க ஏற்கனவே பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் முடிவு செய்யப்பட்டது என்பது தெரிகிறது. எனவே, பின்வரும் கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர்அவர்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

- ஒப்பந்த முறைகேட்டில் ஈடுப்பட்ட ஒப்பந்தகாரரான M/s.Narayan & Co., நிறுவனத்தை நிரந்தர கருப்பு பட்டியலில் சேர்க்கவும்.
- ஒப்பந்தப்புள்ளி குழுவில் இருக்கும் உறுப்பினர்களை பணி நீக்கம் செய்யவும், மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் நிறுவனம் மீதும் குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்படி செயல்பாடுகள் தமிழ்நாடு டெண்டர் டிரன்ஸ்பரன்ஸி சட்டத்திற்கு எதிரானது என்பதால், இனி ஒவ்வொரு செயல்பாடுகளும் எதிராக இல்லாதது போல தீர்ப்பு வழங்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

6. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2–ன் தலைமையிடத்து கோட்ட செயற்பொறியாளர் 29.10.2024 அன்றைய நேரடி விசாணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“மனுதாரர் குறிப்பிட்டவாறு பர்மாநகர், TPP சாலையில் புதியதாக தெருவிளக்குகள் மற்றும் கம்பங்கள் பொருத்தப்படவில்லை. அச்சாலையில் பொருத்தப்பட்ட தெருவிளக்குகள் 2013–ஆம் ஆண்டு Grid 2 திட்டத்தின் கீழ் போடப்பட்டது ஆகும். மேலும் அச்சாலை விரிவாக்கம் மற்றும் பாலம் கட்டும் போது ஏற்கனவே அங்கு இருந்த தெருவிளக்குகள் மற்றும் கம்பங்கள் மாற்றி அமைக்கப்பட்டன.

பர்மா நகர் TPP சாலையில் 2019-2020 ஆண்டு CMCDM- Grants திட்டத்தின் கீழ் புதியதாக பாலம் கட்டப்பட்டது ஆகும். பாலம் கட்டும்போது அங்கு ஏற்கனவே நடுவில் இருந்த தெரு மின் கம்பங்கள் தடையாக இருந்தது. மேலும் TPP சாலை 3 மீட்டர் அளவிற்கு விரிவாக்கம் செய்யப்பட்டது.

சாலை விரிவாக்கம் செய்யப்படுவதால், ஏற்கனவே அங்கு இருந்த தெருவிளக்கு கம்பங்கள் இடையூறாக இருந்த காரணத்தினால், பாலங்கள் துறை மூலம் வைப்புப் பணியாக தெருவிளக்குகளை அகற்றி மாற்று இடத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டது. மேலும் உடனடியாக பாலம் கட்டப்பட வேண்டியிருந்தாலும் அப்பாலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட வேண்டியிருந்தாலும், தெருவிளக்குகளை மாற்றியமைக்க 05.04.2023 அன்று நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாலத்தை திறந்து வைக்க பாலம் தயார் நிலையில் இருந்த காரணத்தினாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திறக்கும் தேதி மற்றும் நேரம் ஒப்புதல் பெறப்பட்ட நிலையில், நடைபாதை மற்றும் சாலை விரிவாக்கம் பணிகள் ஆகியவை

உடனடியாக மேற்கொள்ள வேண்டியிருந்ததால், ஒப்பந்தப்புள்ளிக்கான நடைமுறைகள் மற்றும் உரிய உயர் அதிகாரிகளின் ஒப்புதல் பெறப்பட்டு வரையறுக்கப்பட்ட ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. மேலும் திட்ட மதிப்பிற்கு (-1%) குறைவாக பெறப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, பர்மா நகர், TPP சாலையில் தெருவிளக்குகள் மற்றும் கம்பங்கள் பொருத்தப்பட்ட பணிக்கான ஒப்பந்த நடைமுறையில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்றும், பாலம் திறப்பு விழா மாண்புமிகு முதல்வர் அவர்களால் மேற்கொள்ள தயாராக இருந்த நிலையில் பணிகளை செய்வதற்கான அவசரத்தின் தன்மையை கருத்தில் கொண்டு மின்விளக்கு கம்பங்களை மாற்று பணி, வைப்பு நிதியின்கீழ் உரிய நிர்வாக அனுமதி, தொழில் நுட்ப அனுமதி, வரையறுக்கப்பட்ட ஒப்ப அனுமதி அனைத்தும் பணிகள் துவங்கும் முன்னரே பெறப்பட்டது, மற்றும் உரிய தகுதியான உயர் அதிகாரிகளால் ஒப்புதல் அளிக்கப்பட்டு நெறிமுறைகள் பின்பற்றப்பட்டு அனைத்தும் உரிய முறையிலே நடைப்பெற்றுள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இத்துடன் புகைப்பட ஆதாரங்களை இம்முறைமன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2, மண்டல அலுவலரின் 27.10.2024 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களை எனது மேல் வாக்கு மூலமாக எடுத்துக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் தலைமையிடத்து கோட்ட செயற்பொறியாளர் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் சென்னை மாநகராட்சி, மணலி பர்மா நகர், TPP சாலையில் மின்கம்பங்கள் பொருத்தும் ஒப்பந்தபணியில் முறைகேடு நடந்து உள்ளது என்றும் தெரு விளக்குகள் பொருத்தும்போது TPP சாலை பழுதுடைந்துள்ளது என்பது புகைப்பட ஆவணத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம் எனவும் இதன்படி பார்த்தால் மே 2022க்கு முன்பே அதாவது புதிய சாலை அமைக்கும் முன்பே அச்சாலையில் தெருவிளக்குகள் மற்றும் கம்பங்கள் பொருத்தப்பட்டது புலனாகிறது. பழுது அடைந்த சாலையில் தெருவிளக்குகள் மற்றும் கம்பங்கள் பொருத்தப்பட்ட நிலையில், ஆகஸ்ட் 2022–இல் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு M/s. Narayan & Co., நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது அரசையும் பொதுமக்களையும் ஏமாற்றும் செயலாகும். இதிலிருந்து TPP சாலைக்கு தெருவிளக்குகள் மற்றும் கம்பங்கள் பொருத்தும் பணி M/s.Narayan & Co., நிறுவனத்திற்கு அளிக்க ஏற்கனவே பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் முடிவு செய்யப்பட்டது என்பது தெரிகிறது. எனவே, ஒப்பந்த முறைகேட்டில் ஈடுபட்ட ஒப்பந்ததாரரான M/s.Narayan & Co., மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போல் புதிதாக தெரு விளக்கு கம்பங்கள் பொருத்தப்படவில்லை எனவும், அங்கு பாலம் கட்டும் பணி நடைப்பெற்று வந்ததாலும், அதன் காரணமாக சாலை விரிவாக்கம் செய்யப்பட வேண்டியிருந்தாலும், அங்கு ஏற்கனவே பொருத்தப்பட்டு இருந்த மின்கம்பங்கள் அதற்கு இடையூறாக இருந்த காரணத்தினால், பாலங்கள் துறை கேட்டுக்கொண்டதற்கிணங்க அங்கு ஏற்கனவே தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொண்ட ஒப்பந்த நிறுவனத்திடம் கோரிக்கை வைக்கப்பட்டு பாலங்கள் துறையிடம் FA/GCCயிடம் முறையாக ஒப்புதல் பெற்று வைப்பு தொகையாக ஏப்ரல் 2022–ம் ஆண்டு

ரூ.9,25,000/- பெறப்பட்டு மின்சாரதுறை மூலம், மின்கம்பங்களை மாற்றியமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது என்றும், மேலும் மேற்கண்டப் பணிகள் புதிய பாலம் திறப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் 12.05.2022 தேதியில் ஒப்புதல் பெறப்பட்டதாலும், தெருவிளக்கு கம்பங்கள் பொருத்துவதற்கு அவசர தன்மையை கருத்திற்கொண்டு வரையறுக்கப்பட்ட டெண்டர் கோரி மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்றும், மேலும், அப்பணிகள் உரிய நிர்வாக அனுமதி, தொழில்நுட்ப அனுமதி, வரையறுக்கப்பட்ட டெண்டர் மற்றும் உரிய தகுதியான உயர் அதிகாரிகளால் ஒப்பதல் அளிக்கப்பட்டு நெறிமுறைகள் பின்பற்றப்பட்டு அனைத்தும் உரிய முறையிலேயே நடைபெற்றுள்ளது என்பது பெரு நகர சென்னை மாநகராட்சி மண்டல 2–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் தலைமையிடத்து கோட்ட செயற்பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறியமுடிகிறது.

8. எனவே, இந்நேர்வில் ஒப்பந்த புள்ளி கோரும் முன்னரே, M/s.Narayan& Co., நிறுவனத்தால் தெரு விளக்குகள் மற்றும் கம்பங்கள் அமைக்கப்பட்டது. எனவே, இது prefixed tender என்ற புகார் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மணலி பர்மா நகர், TPP சாலையில் புதிதாக மின்கம்பங்கள் பொருத்தபடவில்லை மாறாக மணலியில் புதிய பாலம் கட்டுவதற்காக, சாலை விரிவாக்கம் செய்யும் போது அதற்கு இடையூறாக இருந்த ஏற்கனவே அங்கு பொருத்தப்பட்டிருந்த மின்கம்பங்களை மாற்றியமைக்கபட்டு அதற்காக ரூ.9,25,000/– நிதியை பாலங்கள் துறை, மின்துறைக்கு மாற்றம் செய்யப்பட்டதாக இம்முறைமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பணியின் அவசர தன்மையை கருத்திற்கொண்டும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சுற்றறிக்கை எண்.P.C.E.C.No.A2/0062/2019 நாள் 22.01.2019–ல் குறிப்பிட்டுள்ளபடி வரையறுக்கப்பட்ட டெண்டர் கீழ் அனுமதி பெற்று அதற்கான நிர்வாக ஒப்புதல் முறையாக பெறப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், மேலே குறிப்பிடப்பட்ட வரையறுக்கப்பட்ட டெண்டர், சுற்றறிக்கை எண். P.C.E.C.No.A2/0062/2019 நாள் 22.01.2019–ல் கூறப்பட்டுள்ள வரையறைகள் மற்றும் The Tamil Nadu Transparency in Tenders Act 1998 மற்றும் The Tamil Nadu Transparency in Tenders Rules. 2000 பின்பற்றி நடைபெற்றுள்ளதா என்றும் அரசிற்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதா என்பது குறித்தும் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் மூலம் ஆய்வு மேற்கொண்டு அத்துறையின் அறிக்கையினை, நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு சமர்ப்பிக்குமாறு, உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2024-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்,

1) திரு எம். இராதாகிருஷ்ணன்,
அறப்போர் இயக்கம்,
எண் 7, சத்யா பிளாசா 2வது தளம்,
டாக்டர் திருமூர்த்தி நகர் பிரதான சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை 600 034.

2) ஆணையர்,
பெரு நகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 3.

3) மண்டல அலுவர்,
மண்டலம் 2,
பெருநகரசென்னை மாநகராட்சி,
எண் 1, காமராஜர் சாலை,
மணலி,
சென்னை 600 068.

4) இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
பேராசிரியர் அன்பழகன் மாளிகை 4வது தளம்,
நந்தனம்,
சென்னை–39.

5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75,சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

6) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75,சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

20/12/24

1/10

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032